## இந்து சமய அறநிலையத்துறை

**அனுப்புநர்**

திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்
சென்னை – 34

**பெறுநர்**

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்கள்/ செயல் அலுவலர்கள்
3. அனைத்து துணை ஆணையர்கள் / செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்கள் / செயல் அலுவலர்கள்

**ந.க.எண்.61387/2021/எம்3, நாள், 18.10.2021**

**பொருள்:** கணினி வழி கேட்பு வசூல் நிலுவை நடவடிக்கைகள் – 01.11.2021 முதல் செயல்படுத்துதல் – அறிவுரைகள் – கணினி, பிரின்டர் மற்றும் இணையவழித் தொடர்பு சாதனங்கள் வாங்குதல் – செயல் அலுவலர்கள் மற்றும் அறங்காவலர்களுக்கு அதிகாரம் அளித்தல் – தொடர்பாக.

**பார்வை:** ந.க.எண்.57744/2018/டி5, நாள் 18.10.2021

******

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கணினி வழியில் வாடகை செலுத்தும் திட்டத்தை 08.10.2021 அன்று துவக்கி வைத்துள்ளார். இத்திட்டம் 01.11.2021 முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. திருக்கோயில்களுக்கு வாடகை செலுத்துபவர்கள் மாதத்தின் முதல் தேதி முதல் பத்தாம் தேதி வரை வாடகை தொகையினை இணைய வழியாகவோ அல்லது திருக்கோயிலுக்கு நேரில் சென்று கணினி வழியாகவோ செலுத்தி அதற்காக ரசீதினை பெற்றுக்கொள்ளும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தை செம்மையான முறையில் செயல்படுத்த கணினி, பிரின்டர் மற்றும் இணைய வழித்தொடர்புச் சாதனங்கள் மிக அவசியமானதாகும். நிதி வசதி குறைவாக உள்ள திருக்கோயில்களுக்கு தேவையான இச்சாதனங்களை நிதி வசதிமிக்க திருக்கோயில்களால் வாங்கப்பட்டு வழங்கப்பட வேண்டும். இப்பணியினை செய்வதற்கான அதிகாரம் மண்டல இணை ஆணையர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இணை ஆணையர்கள் தேவைக்கு ஏற்ப

Verified RealEstate

இச்சாதனைங்களை கொள்முதல் செய்த பின்னர் ஏற்பட்ட செலவினத்தை பொதுநல நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள ஏதுவாக கருத்துருவினை தலைமையிடத்திற்கு அனுப்ப வேண்டும்.

இத்திட்டத்தை காலதாமதம் ஏதுமின்றி விரைந்து செயல்படுத்த ஏதுவாக கணினி உட்பட்ட இணைய வழித்தொடர்பு சாதனங்களை கொள்முதல் செய்வதற்கான அதிகாரம் செயல் அலுவலர்கள் மற்றும் அறங்காவலர்களுக்கு பார்வையில் கண்ட குறிப்பின் வழி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒருமுறை நிகழ்வாக ரூபாய் 50,000 க்கு மிகாமல் கணினி, பிரின்டர் உட்பட இதர சாதனங்களை உடன் வாங்கி நிறுவ வேண்டும். கூடுதல் தேவையிருப்பின் ஏற்கனவே நடைமுறையில் உள்ள முறைப்படி சம்மந்தப்பட்ட உதவி ஆணையர் அல்லது இணை ஆணையரிடம் அனுமதி பெற்று கொள்முதல் செய்து கொள்ளலாம்.

எனவே, எந்தெந்த திருக்கோயில்களுக்கு கணினி, பிரின்டர் உட்பட இதர சாதனங்கள் தேவைப்படுகிறதோ, அந்தத் தேவையினை நிறைவேற்றுவது சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையரின் முழுப் பொறுப்பாகும். இது குறித்த விரிவான அறிக்கையினை 25.10.2021 க்குள் மண்டல இணை ஆணையர்கள் தலைமையிடத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையர்

Verified RealEstate™